ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
Ministry of Economic Development

දිවි නැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

24/4, කාසල් වීදිය, කොළඹ -8.
24/4, காசல் வீதி, கொழும்பு
24/4, Castle street , Colombo - 08.

මගේ අංකය / எனது / My No: DDO/HO/05/MF/05/01

ඔබේ අංකය / உமது இல / Your No: ..............

දිනය / திகதி / Date: 2014.08.22

**வாழ்வின் எழுச்சி சுற்றறிக்கை இலக்கம் 07/2014.**

சகல வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்களுக்கும்,

**வாழ்வின் எழுச்சி சஹன அருண**

**அறிமுகம்:** பயனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேலோங்கச் செய்யும் நோக்கில் ஏற்கனவே வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச்சங்கங்கள் மூலம் வழங்கப்படுகின்ற குறுநிதிக்கடன் வசதிகளுக்கு மேலதிகமாக செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பொருட்டு நிவாரணக்கடன்திட்டம் ஒன்றாக **"வாழ்வின் எழுச்சி சஹன அருண''** கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. வாழ்வின் எழுச்சிப்பயனாளிகளுக்கு இக்கடன் தொகையினை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

01.**<u>கடனின் பொருட்டு தகுதியுடையோர்</u>**

வாழ்வின் எழுச்சிப் பயனாளிகள் இக்கடன் தொகையினை பெற்றுக் கொள்ள தகுதிபெற்றுள்ளனர்.

02.**<u>கடனை வழங்க உத்தேசித்துள்ள விடயங்கள்</u>**

1.நுகர்வுத் தேவையின் பொருட்டு

2. பயனாளிகளினால் ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ள வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பொருட்களைக் கொள்வனவு செய்தல்,ஆரம்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் உழைப்புக்களுக்கான கொடுப்பனவுகள் போன்ற நடவடிக்கைகள்

3.கடன் தொகை ஒன்றினை முடிக்கும் பொருட்டு

4.அவசர தேவை ஒன்றின் பொருட்டு

03.**<u>வழங்கப்படுகின்ற தொகையின் வறையறைகள்</u>**

இதன் கீழ் வழங்கக் கூடிய ஆகக்குறைந்த கடன் தொகையானது ரூபா 5000.00 ஆகும் என்பதுடன் உயர்ந்த பட்ச எல்லையானது ரூபா 50000.00 மாகும். நுகர்வுத் தேவையின் பொருட்டு வழங்கக் கூடிய தொகையானது ரூபா5000.00 இற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

ஏனைய கடன் வகைகளுக்கு ரூபா 50000.00 என்ற உயர்ந்த பட்சம் வரைகடனை வழங்க முடியும்.

04.**<u>வருடாந்த வட்டி வீதமும் மீளச் செலுத்தும் காலமும்</u>**

01.வருடாந்த வட்டி வீதமமானது 4% மாகும்.

2.நுகர்வுக்கடனின் பொருட்டு ஒரு வருடத்திற்கான சலுகைக் காலம் வழங்கப்படுவதுடன் அதன்பின்னர் 24 தவணைகளில் கடனை அறிவிட்டுக் கொள்ளல் வேண்டும்.

3. வாழ்வாதார அபிவிருத்திக் கடனின் பொருட்டு. வருடத்திற்கான சலுகைக் காலம் வழங்கப்படுவதுடன் அதன்பின்னர் சம அளவிலான தவணைகளிலிருந்து குறித்த கடன் தொகையினை அறிவிட்டுக் கொள்ளல் வேண்டும்.

4.கடனைப் பெற்றுக் கொள்வதற்கு வயதெல்லை இல்லை.

05. **<u>ஏனைய விடயங்கள்</u>**

1.கடன் காப்பீடு மற்றும் கூட்டுக்காப்பிட்டின் பொருட்டு வாழ்வின் எழுச்சி நிவாரணக்கடனை உரித்தாக்கிக் கொள்ளக்கூடாது.

2.பொதுவாக கடனை வழங்கும் போது பங்குக் கணக்கிலும் குழுக்கணக்கிலும் பராமரிக்கப்பட வேண்டிய மீதிகள் இதன் பொருட்டு உரித்தாக்கிக் கொள்ளக் கூடாது.

3.இதன் கீழ் வழங்கப்படுகின்ற நுகர்வுக்கடனானது ஏற்கனவே அமுலிலுள்ள நுகர்வுக்கடன் திட்டத்திற்கு மேலதிகமானதாகும்.



| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන) / பணிப்பாளர் (நிர்வாகம்) / Director (Administration) | කාර්යාලය / அலுவலகம் / Office |
| --- | --- | --- | --- |
| දුරකථන/ தொலைபேசி/Telephone: | 011-2669703 | 011- 2669700 | 011-2669725 |
| ෆැක්ස්/ தொலைமடல்/Fax: | 011-2669709 | 011-2678203 | 011-2669725 |
| ඊ-මේල්/ மின்னஞ்சல்/E-Mail: | dgdivineguma@gmail.com | hrddivineguma@gmail.com | |

4.மேலே இலக்கம் 02ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடன்களிலிருந்து நுகர்வுத்தேவையின் பொருட்டான கடன்வகைகளுக்கு மேலதிகமாக மேலுமொரு கடன் தொகையினை மாத்திரம் பெற்றுக் கொள்ள பயனாளிகளுக்கு உரிமையுண்டு.

06. **கடனை அங்கிகரித்தல்**

1.இத்துடன்சமர்ப்பிக்கப்பட்டுள்ளவிண்ணப்பப் படிவதிதிற்கமைய கடனை விண்ணப்பிக்க பணனாளிக்கு விளக்கமளிக்கப்படவேண்டும்.

2.குறித்த கடன் விண்ணப்பப்படிவம் வங்கிக்கு கிடைத்ததன் பின்னர் முகாமையாளரின் அங்கிகாரத்தின் அடிப்படையில் கடனை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளினை மேற்கொள்ளவேண்டும்.

3.வாழ்வின் எழுச்சி நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு இவ்விண்ணப்படிவத்தினை இலகுவாகப்ப பெற்றுக கொள்வதற்கு ஏற்ற விதத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு போதுமான அளவு விண்ணப்பப்படிவங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

4.வாழ்வின் எழுச்சசி அபிவிருத்த்தி உத்தியோகத்தரினால் வங்கி அங்கத்தவர் என வழங்கப்படும் சிபார்சின் பிரகாரம் கடன் தொகையினை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளல் வேண்டும்.

07. **செயற்படுத்துதல் கால வரையரை:**

(1) பயனாளிகளை விளக்கமளித்தல்:2014/08/25ம் திகதியிலிருந்து கடன் விண்ணப்பப்படிவங்களைப பெற்றுக் கொள்ளல்.

(11)கடனை வழங்குதல்: 1.நுகர்வுத் தேவயின் பொருட்டு கடன் விண்ணப்பப்படிவம் ஒப்படைக்கப்பட்ட திகதியிலேயே கடனை வழங்க நடவடிக்கைகளை மேற் கொள்ளல் வேண்டும்.

11.ஏனைய கடன் விண்ணப்பப்படிவங்கள் கிடைத்து 03 நாட்களுக்குள் கடனை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளல் வேண்டும்.

08. **முன்னேற்றத்தினை அறிக்கையிடல்**

இக்கடன் திட்டத்தினை செயற்படுத்துவது தொடாபான முன்னேற்றத்தினை இத்துடன்இணைக்கப்பட்டுள்ள படிவ இலக்கம் 02இன் பிரகாரம் பூர்த்தி செய்து வாழவின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கத்தின் மூலம் வலய மேலதிகப்பணப்பாளர் தலைமையதிபதிக்கு ஒவ்வொரு மாத இறுதியிலும் வழங்கப்படுதல் வேண்டும்.

இக்கடன் திட்டத்தினை செயற்படுத்தும் பொருட்டு தங்களது விஷேட கவனத்தனைச் செலுத்துமாறும் மேலும் அறியத்தருகின்றேன்.

ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க
பணிப்பாளர் தலைமையதிபதி
வாழவின் எழுச்சி அபிவிருத்தித்திணைக்களம்

பிரதிகள்

01.சகல பிரதேச ஒருங்கிணைபுக் குழு தலைவர்கள்

02. செயலாளர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

03.செயலாளர் நிதி அமைச்சு

04.வாழ்வின் எழுச்சி மேலதிகப்பணப்பாளர் தலைமையதிபதிகள்

05.மாவட்ட மேலதிகப்பணிப்பாளர் தலைமையதிபதிகள்

06.பிரதேச செயலாளர்கள்

07.உதவி ஆணையாளர்கள்

08.சகல மாவட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள்

09.வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் சகல பணிப்பாளர்கள்

10.வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்பனை வங்கிச்சங்க முகாமையாளர்கள்

11.வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை அமைப்புக்ககள்

12.பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள்.